GOVERNMENT OF MADRAS

# சென்னை மாநிலத்தில்

# நீர்ப்பாசன மின்சாரத் திட்டங்கள்

ⓒ

சென்னை அரசாங்கம்

சாங்க செய்தித்துறை வெளியீடு

ACL-TNAL 00817

D66,1135.211
N60
68038

முதற் பதிப்பு: மார்ச் 1960

விலை 10 ந. பை.

68038

# முன்னுரை

நாட்டின் விடுதலைக்குப்பின் நமது அரசினரால் வகுத்துச் செயல் படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களால் நாடு கணிசமான அளவு முன்னேற்றமடைந்துள்ளது. பத்து ஆண்டுகளுக்கு முன் நமது மாநிலத்தில் உற்பத்தியான உணவுப் பொருள்களைவிட-இன்று சுமார் 20 லட்சம் டன்கள் அதிகமாக உற்பத்தியாகியுள்ளன. 1951-ல் நமது மாநிலத்தில் சுமார் 1600 கிராமங்கள் மட்டுமே மின்சார வசதி பெற்றிருந்தன. இன்று சுமார் 8,500 கிராமங்களுக்கு அவ்வசதி விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு விவசாயத் துறையிலும், மின்சாரத் துறையிலும் நமது மாநிலம் குறிப்பிடத்தக்க அளவு முன்னேறியுள்ளது.

இதற்குக் காரணம் என்ன? பாசன வசதியும் - பெருமளவிலான மின்சார உற்பத்தியும்தான். மாநிலமெங்கிலும் உள்ள பல்வேறு நதிகளின் குறுக்கே அணைகள் கட்டி அவற்றில் நீரைத் தேக்கி, அதனை விவசாயத்துக்கும் மின்சார உற்பத்திக்கும் பயன்படுத்தியதால் இந்தப் பலன் கிட்டியுள்ளது. இனி, இத்திட்டங்களால் கிடைத்த பயனை மட்டும் அறிந்து கொள்வதோடு நில்லாமல், இத்திட்டங்களைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டியது முக்கியமாகும்.

புதிதாகக் கட்டப்பட்டுள்ளனவும் - கட்டப்பட்டு வருவனவுமான அணைகளின் புகைப்படங்கள் - மின்சாரத் திட்டங்களின் புகைப்படங்கள், அவைகளைக் கட்டுவதற்காகும் செலவு - மற்றும் அவைகளைப் பற்றிய இதர விபரங்கள் அனைத்தும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

நெறியாளர்

**சென்னை அரசாங்க செய்தித்துறை**

# மின்சார உற்பத்தி

## சென்னை மின்சார நிலைய விஸ்தரிப்பு

**இடம் :** சென்னை நகர், பேசின்பிரிட்ஜ் மின்சக்தி நிலையம்.


**மின்சக்தி உற்பத்தி :** 60,000 கிலோவாட்டுகள் (மூன்று கட்டங்களில்)

**செலவு :** ரூ. 955.77 லட்சம்.

**வேலை முன்னேற்றம் :** முதல் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் 15,000 கிலோவாட்டுகள் உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு யந்திரங்கள் இணைக்கப்பட்டன. மூன்றாவது கட்டத்தில் 30,000 கிலோ வாட்டுகள் உற்பத்தி செய்யக்கூடிய யந்தி ரம் பொருத்தப்பட்டு 1958 ஏப்ரல் முதல் மின்சக்தி உற்பத்தி செய்து வருகிறது.



சென்னை அனல் மின்சார நிலையம்



பெரியாறு நீர் மின்சார நிலையத்தின் ஒரு தோற்றம்

# பெரியாறு நீர் மின்சாரத் திட்டம்

**இடம் :** மதுரை மாவட்டத்தில் பெரியாற்றின் குறுக்கே கட்டப் பட்டுள்ள பெரியாறு அணை சமீபம்.

**மின்சார உற்பத்தி :** 105,000 கிலோவாட் (ஆரம்ப கட்டம்)
140,000 கிலோவாட் (இறுதிக் கட்டம்)


**அணைத்திட்டம் :** அணையின் நீளம்: 300 அடி. உயரம்: 93 அடி.
நீர்த்தேக்கம்: 30 லட்சம் கன அடி.

**செலவு :** ரூ. 10·09 கோடி.


**வேலை முன்னேற்றம் :** திட்ட வேலைகள் 1955, பிப். 11-ம் தேதி ஆரம்பமாகி, தற்பொழுது முடிவடைந்து விட்டன. மூன்று மின்சக்தி உற்பத்தி இயந்திரங்கள் மின்சக்தி உற்பத்தி செய் கின்றன.



போர்பே அணை : பெரியாறு நீர் மின்சாரத் திட்டம்



உருவாகும் **அவலாஞ்சு அணை :** குந்தா நீர் மின்சாரத் திட்டம்



உருவாகும் **எமரால்ட் அணை :** குந்தா மின்சாரத் திட்டம்

# குந்தா நீர் மின்சாரத் திட்டம்


**இடம்:** நீலகிரி மாவட்டத்தில் குந்தா பள்ளத் தாக்கில் உள்ளது.

**அணைகள் :**

(1) **அவலாஞ்சு அணை :** நீளம் : **1,200** அடி. அகலம் : **21** அடி. உயரம் : **186** அடி.

(2) **எமரால்ட் அணை :** நீளம் : **1,060** அடி. அகலம் : **21** அடி. உயரம் : **212** அடி. நீர்த்தேக்கம் : **540** கோடி கன அடி. (இரண்டு அணைகளுக்கும் சேர்த்து)

உருவாகும் **போர்பே அணையின்** ஒரு தோற்றம்



**(3) மேல் பவானி அணை :** நீளம் : **1,400** அடி.
அகலம் : **21** அடி.
உயரம் : **266** அடி.
நீர்த்தேக்கம் : **30,470** லட்சம் கன அடி.

**(4) குந்தாபாலம் அணை :** நீளம் : **560** அடி.
அகலம் : **15** அடி.
உயரம் : **95** அடி.
நீர்த்தேக்கம் : **550** லட்சம் கன அடி.

**சுரங்க வழிகள் :**


| | |
|---|---|
| மேல் பவானி அணையிலிருந்து அவலாஞ்சு அணைக்கு இணைப்புச் சுரங்க வழியின் நீளம் | 2,440 அடி. |
| சுரங்கவழி நெ. 1 நீளம் (அதாவது அவலாஞ்சு அணையிலிருந்து நீர்ச் சுழல் தேக்கம் வரைக்கும்.) | 14,600 அடி. |
| சுரங்கவழி நெ. 2. (அதாவது குந்தா பாலம் அணையிலிருந்து நீர்ச் சுழல் தேக்கம் வரைக்கும்) நீளம் | 11,627 அடி. |


**மின்சக்தி உற்பத்தி :**

**மின்சக்தி யந்திரம் நெ. 1.** 40,000 கிலோவாட் (ஆரம்ப கட்டம்)
60,000 கிலோவாட் (இறுதிக் கட்டம்)

| | |
|---|---|
| **மின்சக்தி யந்திரம் நெ. 2.** | 1,40,000 கிலோவாட் (ஆரம்ப கட்டம்)<br>**1,75,000** கிலோவாட் (இறுதிக் கட்டம்) |
| **செலவு :** | ரூ. **35·44** கோடி.<br>கொழும்புத் திட்டத்தின் கீழ் கனடா நாடு அளிக்கும் உதவி (யந்திரங்கள் முதலியன) சுமார் ரூ. **12·5** கோடி. |
| **வேலை முன்னேற்றம் :** | **1956** ஜூன் **29**ம் தேதி இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. எல்லா அணைப் பகுதிகளிலும் கல் கட்டிடம் கட்டும் |

உருவாகும் **குந்தாபாலம் போர்பே அணை**





முதலாவது குந்தா மின்சார நிலையம்

வேலை முனைப்பாக நடந்து வருகிறது. சுரங்க வழிகள் வெட்டப்பட்டுவிட்டன. முதலாவது மின்விசை உற்பத்தி நிலையம் வேலை செய்து வருகிறது. இரண்டாவது மின்விசை நிலையம் உருவாகிறது.

**திட்டத்தின் சிறப்பியல்புகள் :** சென்னை மாநிலத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்களில் இதுவே பெரியது. மேலும், இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்களை விடவும் மிகப் பெரியதாகும். அவலாஞ்சு, எமரால்ட் அணைகள் சென்னை மாநிலத்தில் மிகவும் உயரமான அணைகள்.


# பாசனத் திட்டங்கள்


## மேட்டூர் கால்வாய்

**இடம் :** சேலம் மாவட்டம் மேட்டூர் அணையில் மேல் பாக மடையிலிருந்து பிரிகிறது.

**கால்வாய்கள் :** கோயம்புத்தூர், சேலம் மாவட்டங்களில் 45,000 ஏக்கர் பாசன வசதிகளுக்காக ஒரு கால்வாய். நான்காவது மைலில் பிரதான வாய்க்கால் இரு கிளைகளாகப் பிரிந்து, கிழக்குக் கரையோரக் கால்வாய் சுமார் 40-

மேட்டூர் கால்வாய்





நீர் கொண்டுவரும் குழாய்கள்

மைல்கள் ஓடி, சேலம் மாவட்டத்தில் 27,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதியளிக்கிறது. மேற்குக்கரையோரக் கால்வாய் சுமார் 27 மைல்கள் ஓடி சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களில் 18,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதியளிக்கிறது.

**செலவு :** ரூ. 183 லட்சம்.

**வேலை முன்னேற்றம் :** திட்ட வேலை 1949 ல் ஆரம்பிக்கப்பட்டு, முடிக்கப்பட்டுவிட்டது. 1957-58-ல் 42,500 ஏக்கர் நிலத்திற்குப் பாசனத்திற்காகத் தண்ணீர் விடப்பட்டது.

15

# கீழ் பவானி

**இடம் :** கோயம்புத்தூர் மாவட்டம், பவானி ஆற்றின் குறுக்காக அணைத்திட்டம். மேட்டுப்பாளையத்திலிருந்து 23 மைல்


**அணை :**

உயரம் : 204 அடி (கல்கட்டிடம்)
120அடி (மண் அணைப்பகுதி)

நீளம் : 1,523 அடி (கல்கட்டிடம்)
27,319 அடி (மண் அணைப் பகுதி)

கீழ் பவானி நீர்த்தேக்கம்






கீழ் பவானியின் பிரதான கால்வாய்


| | |
|---|---|
| கட்டிடம் : | காங்க்ரீட்டும், கல்கட்டிடமும் 136 லட்சம் கன அடி. மண் அணைப் பகுதி 1610 லட்சம் |
| நீர்த்தேக்கம் : | 2,80,000 லட்சம் கன அடி. |
| கால்வாய் : | அணையின் வலப்பக்கத்திலிருந்து 124 மைல் நீள கால்வாய். |
| நன்மைகள் : | 2,07,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி. |
| செலவு : | ரூ. 9·51 கோடி. |
| வேலை முன்னேற்றம் : | 1948 ல் திட்டவேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 1955 ல் முடிவடைந்தன. |

# மணிமுத்தாறு அணை

| | |
|---|---|
| இடம் : | திருநெல்வேலி மாவட்டம், கல்லிடைக் குறிச்சியிலிருந்து தென் மேற்கில் நான்கு மைல் தூரத்தில் உள்ளது. |
| அணை : | உயரம்: 150 அடி கல்கட்டிடம்; 115 அடி மண் அணைப் பகுதி. |
| | நீளம் : 1,230 அடி கல்கட்டிடம்; 8,375 அடி மண் அணைப் பகுதி. |
| கட்டிடம் : | காங்கிரீட்டும், கல்கட்டிடமும் : 101·6 லட்சம் கன அடி. |
| | மண் அணைப் பகுதி 1551·9 லட்சம் கன அடி. |
| நீர்த்தேக்கம் : | 55,110 லட்சம் கன அடி. |

மணிமுத்தாறு அணை






மணிமுத்தாறு
அணையின்
பிரதான
கால்வாய்


| | |
|---|---|
| **கால்வாய் :** | அணையின் வலப்பக்கத்திலிருந்து 28 மைல் நீள கால்வாய். |
| **நன்மைகள் :** | ஏரிப்பாசன வசதி பெறும் 20,000 ஏக்கர் நிலங்கள் பயனடையும். மேலும் தற்போது தாமிரவருணி நதி நீர்ப்பாசனம் பெறும் 83,000 ஏக்கர் நிலங்களும் பலனடையும். |
| **செலவு :** | ரூ. 5·05 கோடி. |
| **வேலை முன்னேற்றம் :** | திட்ட வேலைகள் 1950ல் ஆரம்பிக்கப் பட்டன. 1958 ஜனவரி 3ம் தேதி பாசனத்திற்குத் திறந்து விடப்பட்டது. |

# அமராவதி அணை

| | |
|---|---|
| **இடம் :** | கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப் பேட்டை ரயில் நிலையத்திலிருந்து சுமார் 13 மைல் தூரத்தில் உள்ளது. |
| **அணை :** | உயரம் : 164 அடி கல்கட்டிடம்.<br>100 அடி மண் அணைப்பகுதி.<br>நீளம் : 1,067 அடி கல்கட்டிடம்.<br>2,527 அடி மண் அணைப்பகுதி. |
| **கட்டிடம் :** | காங்கிரீட்டும், கல்கட்டிடமும் : 90 லட்சம் கன அடி.<br>மண் அணைப்பகுதி : 500 லட்சம் கன அடி. |


அமராவதி அணை





அமராவதி அணையின் பிரதான கால்வாய்

| | |
|---|---|
| **நீர்த்தேக்கம் :** | 40,000 லட்சம் கன அடி. |
| **கால்வாய் :** | 40 மைல் நீளமுள்ளது. |
| **நன்மைகள் :** | சாதாரண ஆண்டில் 21,000 ஏக்கர்கள் பாசனவசதி பெறும். மேலும் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் தற்போதுள்ள 32,000 ஏக்கர் நிலங்களும் பயனடையும். |
| **செலவு :** | ரூ. 310 லட்சம். |
| **வேலை முன்னேற்றம் :** | திட்ட வேலைகள் 1953 டிசம்பரில் ஆரம்பிக்கப் பட்டன. 15-11-1957-ல் பாசனத்திற்குத் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. |



வைகை அணை

68038

## வைகை அணை

**இடம் :** மதுரை மாவட்டம் பேரணை மதகு மேற்புறத்தில் சுமார் 20 மைல் தூரத்தில் உள்ளது. பெரியாறு ஏரியிலிருந்து விடப்படும் அதிகப்படியான நீரையும், வைகையாற்றின் அதிகப்படியான நீரையும் தேக்கி வைப்பது.

**அணை :** உயரம் : 106 அடி.

நீளம் : 1,035 அடி. (கல் கட்டிடம்)

1,780 அடி (மண் அணைப்பகுதி) அணையின் இடப் பக்கம்.

8,860 அடி (மண் அணைப்பகுதி) அணையின் வலப் பக்கம்.

D66;1135:211
N60

| | |
|---|---|
| கட்டிடம் : | காங்கிரீட்டும், கல்கட்டிடமும் : 54 லட்சம் கன அடி.<br>மண் அணைப்பகுதி : 510 லட்சம் கன அடி. |
| நீர்த்தேக்கம் : | 68,780 லட்சம் கன அடி. |
| கால்வாய் : | 17½ மைல் நீளம். |
| நன்மைகள் : | இராமனுதபுரம், மதுரை மாவட்டங்களில் சுமார் 20,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதிகள் அளித்தல். மேலும் வைகையாற்றில் அதிகப்படியாக வரும் நீரைத் தேக்கி, வைகைப் பாசன நிலங்களுக்கு உதவியளித்தல். |
| செலவு : | ரூ. 330 லட்சம். |
| வேலை முன்னேற்றம் : | திட்ட வேலைகள் 1954 ஏப்ரல் மாதம் ஆரம்பமாயின். 1958 ஜூலை மாதம் பாசனத்திற்குத் திறந்து விடப்பட்டது. |

# சாத்தனூர் அணை


**இடம் :** வடஆற்காடு மாவட்டம், திருவண்ணமலை யிலிருந்து 22 மைல் தொலைவில் உள்ளது.

**அணை :** உயரம் : 135 அடி.
நீளம் : 2,580 அடி (மொத்தம்)
1,400 அடி (கல்கட்டிடம்)
1,180 அடி (மண் அணைப்பகுதி)

**கட்டிடம் :** கல்கட்டிடம் : 80 லட்சம் கன அடி.
மண் அணைப்பகுதி : 43 லட்சம் கன அடி.

**நீர்த்தேக்கம் :** ஆரம்ப கட்டம் : 46,000 லட்சம் கன அடி.
இறுதிக் கட்டம் : 81,000 லட்சம் கன அடி.

சாத்தனூர் அணை






சாத்தனூர் கால்வாய்

| | |
|---|---|
| **கால்வாய் :** | **22** மைல் நீளத் தலைக் கால்வாய் ; **55** மைல் நீள கிளைக் கால்வாய்கள். |
| **நன்மைகள் :** | தென்னாற்காடு, வடஆற்காடு மாவட்டங்களில் **21,000** ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதிகள் கிடைக்கும். மேலும், ஏற்கனவே பாசன வசதி பெறும் சுமார் **3,300** ஏக்கர் நிலங்களுக்கு நிரந்தர பாசன வசதிகள் ஏற்படும். |
| **செலவு :** | செலவு மதிப்பீடு : ரூ. **289** லட்சம்.<br>செலவானது : ரூ. **242** லட்சம்.<br>சேமிப்பு : ரூ. **47** லட்சம். |
| **வேலை முன்னேற்றம் :** | திட்டவேலைகள் **2—10—1954**-ல் ஆரம்பமாயின. **10--11--1957**-ல் பாசனத்திற்குத் திறந்து விடப்பட்டது. |

# கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம்

| | |
|---|---|
| **இடம் :** | சென்னை - கள்ளிக்கோட்டை நெடுஞ்சாலையில் (சேலம் மாவட்டம்) 163/4 மைல் கல்லிலிருந்து மேற்கில் இரண்டு மைல் தொலைவில் உள்ளது. |
| **அணை :** | உயரம் : 76 அடி.<br>நீளம் : 3,250 அடி (மொத்தம்)<br>2,339 அடி (மண் அணைப்பகுதி)<br>911 அடி (கல்கட்டிடம்) |
| **கட்டிடம் :** | கல்கட்டிடம் : 26 லட்சம் கன அடி.<br>மண் அணைப்பகுதி : 150 லட்சம் கன அடி. |

கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம்









| | |
|---|---|
| நீர்த்தேக்கம் : | **24,100** லட்சம் கன அடி. |
| கால்வாய் : | இடப்பக்கக் கால்வாய் : **11** மைல் **3** பர்லாங்கு.<br>வலப்பக்கக் கால்வாய் : **8** மைல் **6** பர்லாங்கு. |
| நன்மைகள் : | **7,500** ஏக்கர் நிலங்கள் தற்போது பயனடையும். இறுதிக் கட்டத்தில் **9,000** ஏக்கர் பயனடையும். |
| செலவு : | செலவு மதிப்பீடு : ரூ. **202·43** லட்சம்.<br>செலவானது : ரூ. **172·43** லட்சம்.<br>சேமிப்பு : ரூ. **30** லட்சம். |
| வேலை முன்னேற்றம் : | திட்டவேலைகள் **3-1-55**ல் ஆரம்பிக்கப் பட்டன. **10-11-1957**-ல் பாசனத்திற்குத் தண்ணீர் விடப் பட்டது. |

# புதுக்கட்டளைக் கால்வாய்

| | |
|---|---|
| இடம் : | திருச்சி மாவட்டம், மாயனூர். |
| வேலைத் திட்டம் : | காவேரி நதியின் தென்பாகத்திலிருந்து தற்போது பிரிந்து செல்லும் தென்கரைக் கால்வாய்க்கு அருகிலிருந்து 86 மைல் நீளமுள்ள புதுக்கால்வாய் வெட்டுவது. |
| நன்மைகள் : | பிரதான கால்வாய்கள் மூலம் 8,622 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும். மேலும், தற்போது ஏரிப்பாசனத்திலுள்ள 12,000 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறும். இதில் 8,723 ஏக்கர் நன்செய் நிலங்கள். |
| செலவு : | ரூ. 172 லட்சம். |
| வேலை முன்னேற்றம் : | திட்ட வேலைகள் 17—8—1957-ல் ஆரம்பிக்கப்பட்டு தற்போது முடிவடைந்து விட்டன. |

புதுக்கட்டளைக் கால்வாய்





புள்ளம்பாடி கால்வாய்


## புள்ளம்பாடி கால்வாய்

| | |
|---|---|
| **இடம் :** | காவேரி நதியில் மேல் அணைக்குச் சமீபத்தில். |
| **வேலைத் திட்டம் :** | ஸ்ரீரங்கத்தில் அணைக் கட்டிற்குச் சற்று மேற் புறத்தில் காவேரி நதியின் இடப் புறத்தில் தொடங்கி **54** மைல் நீளப் புதுக் கால்வாய் வெட்டுவது. |
| **நன்மைகள் :** | திருச்சி மாவட்டத்தில் **22,114** ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி ஏற்படும். |
| **செலவு :** | ரூ. **157** லட்சம். |
| **வேலை முன்னேற்றம் :** | திட்ட வேலைகள் **17—8—1957**-ல் ஆரம்பமாகி தற்போது முடிவடைந்து விட்டன |


# வீடூர் அணை

| | |
|---|---|
| **இடம் :** | தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம் தாலுக்கா, வீடூர் அருகில் வராக நதியின் குறுக்கே தொண்டியாறு சங்கமத்திற்குக் கீழ் அரை மைல் தூரத்தில் அணை கட்டுவது. |
| **அணை :** | உயரம் : **50** அடி. நீளம் : **430** அடி (கல்கட்டிடம்) **14,370** அடி (மண் அணைப் பகுதி) |
| **கட்டிடம் :** | கல்கட்டிடம் : **11·7** லட்சம் கன அடி. மண் அணைப்பகுதி : **149·4** லட்சம் கன அடி. |
| **நீர்த்தேக்கம் :** | **5,500** லட்சம் கன அடி. |

வீடூர் அணை



| | |
|---|---|
| **கால்வாய் :** | அணைக்கட்டின் இடப் புறத்திலிருந்து சுமார் **11** மைல் நீளமுள்ள கால்வாய். |
| **நன்மைகள் :** | **3,200** ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதிகள் ஏற்படும். இதில் **1,000** ஏக்கர்கள் புதுச்சேரியில் உள்ளன. |
| **செலவு :** | ஆகும் செலவு ரூ. **67·49** லட்சம். ஆனால், ரூ. **61·37** லட்சம் செலவிட அரசாங்கம் அனுமதியளித்திருக்கிறது. |
| **வேலை முன்னேற்றம் :** | **1958**-ல் தான் இந்த வேலையை ஆரம்பிக்க அனுமதி தரப்பட்டதெனினும், தற்பொழுது வேலைகள் முடிவடைந்து, பாசனத்திற்குத் திறந்து விடப் பட்டிருக்கிறது. |
| **குறிப்பு :** | இத்திட்டச் செலவைச் சென்னை அரசாங்கமும், புதுச்சேரி அரசாங்கமும் முறையே **11:5** என்ற விகிதாசாரத்தில் ஏற்றுக்கொள்ளும். |



ஆரணியாறு அணை

## ஆரணியாறு அணை

**இடம் :** செங்கல்பட்டு மாவட்டம், திருவள்ளூர் தாலுக்கா, நாகலாபுரம் கிராமத்திலிருந்து மேற்கே சுமார் **4** மைல் தூரத்தில் ஆரணி யாற்றில் குறுக்காக நீர்த்தேக்கத் திட்டம். இங்கிருந்து **11** மைல் கிழக்கே சூரட்டப் பள்ளியில் அணைக்கட்டு.

**அணை :** உயரம் : **47** அடி (மண் அணைப்பகுதி)
நீளம் : **2** மைல் **2** பர்லாங்கு.

நீர்த்திருப்பம்

| | |
|---|---|
| அணைக்கட்டு : | நீளம் 516 அடி. |
| கட்டிடம் : | மண் அணைப்பகுதி : 440 லட்சம் கன அடி. |
| நீர்த்தேக்கம் : | முழு அளவு : 18,630 லட்சம் கன அடி. சாத்திய அளவு : 17,340 லட்சம் கன அடி. |
| கால்வாய் : | இடப் பக்கம் : 3 மைல், 2 பர்லாங்கு<br>வலப் பக்கம் : 3 மைல், 6 பர்லாங்கு<br>தூரட்டப்பள்ளி அணைக்கட்டிலிருந்து 10 மைல், 4 பர்லாங்கு. |
| நன்மைகள் : | 2530 ஏக்கர் புதிதாக பாசன வசதி பெறும். 8670 ஏக்கர் நிரந்தர பாசன வசதி பெறும். நல்ல பருவ நிலையுள்ள வருடங்களில் 4900 ஏக்கர்களில் இரண்டாம் போக விளைச்சல் எடுக்க முடியும். |
| செலவு : | ரூ. 104 லட்சம். |
| வேலை முன்னேற்றம் : | திட்ட வேலைகள் 1957 மார்ச் மாதம் முடிக்கப்பட்டு விட்டன. |

ரத்னம் பிரஸ், சென்னை-1.